எம். ஏ. வீ. பிக்சர்ஸ்

# டவுன் பஸ்

டைரக்ஷன்
K.சோமு

கதை, வசனம்
A.P.நாகராஜன்

ஸ்டுடியோ
கோவை ஸெண்ட்ரல்

MAV PICTURES COIMBATORE

BHARAT STUDIO

## நடிகர்கள்

N. N. கண்ணப்பா
V. K. ராமசாமி
V. M. ஏழுமலை
P. D. சம்மந்தம்
R. பக்கிரிசாமி
S. S. கதிரேசன்
T. V. சத்யமூர்த்தி
M. ரத்னம்
பாலு

T. K. ராமச்சந்திரன்
P. S. வெங்கடாஜலம்
A. கருணாநிதி
K. சாயிராம்
T. R. நடராஜன்
C. K. சௌந்தரராஜன்
M. K. சாமி
சுப்ரமணியம்
C. R. ராஜு

M. நடராஜன்

## நடிகைகள்

அஞ்சலி தேவி
T. P. முத்துலக்ஷ்மி
K. S. அங்கமுத்து

M. N. ராஜம்
தாம்பரம் லலிதா
சாந்தா தேவி

பேபி காஞ்சனா

## பின்னணி

**T. M.** சௌந்தரராஜன்
திருச்சி லோகநாதன்
சீர்காழி கோவிந்தராஜன்
**S. C.** கிருஷ்ணன்

**M. S.** ராஜேஸ்வரி
ராதா ஜெயலட்சுமி
**U. R.** சந்திரா
**P.** கனகா

**K. R.** செல்லமுத்து

## சிருஷ்டி கர்த்தாக்கள்

| | | |
|---|---|---|
| கதை - வசனம் | ... | A. P. நாகராஜன் |
| பாடல்கள் | ... | கவி. கா. மு. ஷெரீப் |
| சங்கீதம் | ... | K. V. மஹாதேவன் |
| ஒளிப்பதிவு | ... | V. K. கோபால் |
| ஒலிப்பதிவு | ... | P. கோவிந்தன் நாயர் |
| பாடல்கள் ஒலிப்பதிவு | ... | T. S. ரெங்கசாமி (ரேவதி ஸ்டுடியோ) |
| லேபரட்டரி | ... | C. A. சுந்தர்ராஜ் |
| எடிட்டிங் | ... | T. விஜயரங்கம் |
| மேக்கப் | ... | சங்கர்ராவ் நிபாத்கர்<br>K. R. ராகவன் S. R. சுடலை |
| ஆர்ட் & செட்டிங்ஸ் | ... | M. P. குட்டியப்பு<br>A. K. பொன்னுசாமி |
| ஸ்டில்ஸ் | ... | K. அனந்தன் |
| உடை அலங்காரம் | ... | T. A. மாதவன்<br>R. S. மணி (டைலர்) |
| நடன அமைப்பு | ... | M. சம்பத்குமார் |
| நிர்வாகம் | ... | M. A. தியாகராஜன் |

தயாரிப்பாளர்

**M. A. வேணு**

டைரக்ஷன்

**K. சோமு**

---

இப்படத்தின் கதை, வசனம், பாடல்கள் அனைத்தும்
M. A. V. பிக்சர்சாருக்கே உரித்தானது

---

# 'டவுன் பஸ்'

## கதைச் சுருக்கம்

அம்பிகா பஸ் ட்ரான்ஸ்போர்ட் என்ற டவுன் பஸ் கம்பெனியில் ஒரு சாதாரண ட்ரைவர் வேலையில் சேர்ந்த வேலு தன் உண்மையான உழைப்பால் முதலாளி தயாநிதி அவர் மகள் விமலா இவர்கள் இருவரின் அன்புக்கும் பாத்திரமாகி அக்கம்பெனி மானேஜரா கிறான். அக்கம்பெனிலேயே கண்டக்டர் வேலை செய்து வந்த அமுதாவை வேலு திருமணம் செய்துகொள்கிறான். அவள் இஷ்டத்திற்கிணங்கி தன்னிடமுள்ள ரௌடிக் கூட்டத்தை வேலு கலைக்க அக்கூட்டத்தை சேர்ந்த பொன்னை, தடாலூரான் இருவரும் அவனுக்கு எதிரி களாகின்றனர். தயாநிதி மகள் விமலா தன் மாமன் ராமுவை கல்யாணம் செய்துகொள்ள மறுத்து வேலுவை மணம் செய்துகொள்கிறேன் என்று சொல்ல தயாநிதி வேலுவிடம் இதைப்பற்றி கேட்கிறார். இருவருக்கும் வாக்குவாதமாகி முடிவில் வேலு வேலையை ராஜினுமா செய்து வெளியேறுகிறான். தான் சேர்த்து வைத்திருக்கும் பணத்தைக் கொண்டு சிறு தொழில் செய்து பிறகு படிப் படியாக முன்னேறி ஒரு பெரிய பஸ் கம்பெனிக்கு முதலாளி ஆகிறான்

ராமு தயாநிதிப் பிள்ளை சொத்தெல்லாம் தனக்கே சேர்ந்துவிடுமென எண்ணி அவரை விஷம் வைத்து கொன்று விடுகிறான். பொன்னை, தடாலூரான் இருவரும் அவனுடன் சேர்ந்து கொண்டு வேலுவை பழிவாங்க சதி திட்டம் போடுகின்றனர்.

கம்பெனி வேலையாக சென்னை வந்து தங்கியிருந்த வேலுவுக்கு சில துஷ்டர்களின் சிநேகிதத்தால் பங்கஜம்

என்ற ஒரு தாசியின் தொடர்பு ஏற்பட்டு இருவரும் மைசூரில் உல்லாசமாக பொழுது போக்குகின்றனர். தயா நிதி இறந்தவுடன் வீட்டைவிட்டு வெளியேறிய விமலாவை மைசூரில் ஒரு ஹோட்டலில் பங்கஜம் எதிர் பாராத விதமாக சந்திக்கிறாள். விமலாவின் பரிதாப நிலையைக் கண்டு தன்னுடன் ஊருக்கு அழைத்து வரு கிறாள்.

விராயி மூலமாய் வேலுவின் தாசி தொடர்பை அறிந்த அமுதாவின் மனம் சஞ்சலப்படுகிறது. வேலு ஊரிலிருந்து வந்தவுடன் இது விஷயத்தைப்பற்றி கேட்கிறாள். இரு வருக்கும் சண்டை உண்டாகிறது. முடிவில் அமுதா வேண்டுகோளின்படி தன்னை மறந்துவிடும்படி பங்கஜத் திற்கு வேலு கடிதம் எழுதுகிறான். சுருளிமலை மூலம் வேலு பங்கஜம் தொடர்பை அறிந்த ராமு தன் சகாக்களுடன் வேலுவை அங்கேயே தீர்த்துக்கட்டுவதென முடிவு செய்கிறான். இதையறிந்த விமலா வேலுவை காப்பாற்ற அங்கிருந்து புறப்படுகிறாள். அதே சமயம் வேலு ஊரி லிருந்து வருகிறான். பங்கஜத்திற்கு சமாதானம் சொல் கிறான். வேலுவுக்கு ஆபத்தென்று விமலா மூலமாய் அறிந்த பெருக்காள் அமுதாவிடம் விபரத்தை சொல்ல, அமுதா பெருக்காள் இருவரும் பங்கஜம் வீட்டிற்கு புறப் படுகின்றனர். பங்கஜம் வீட்டில் வேலு ராமுவின் நய வஞ்சகத்தால் இம்சிக்கப்படுகிறான். பங்கஜம் தவிக் கிறாள்............

ராமு, பொடுவை, தடாவூரான் இம்மூவரின் முடிவு என்ன ?............

அமுதா, பெருக்காள் இவர்கள் இருவரின் நிலை என்ன ?............

வேலு, பங்கஜம் என்ன ஆனார்கள் ?............

என்பதை வெள்ளித் திரையில் காண்க

# 'டவுன் பஸ்'

## பாடல்கள்

---

1 ரௌடிகள் *பாடியது :* T. M. சௌந்தரராஜன்
சீர்காழி கோவிந்தராஜன்

*பணம் படைத்த செல்வர் முதல்*
*பதவிக்கார ஐயாவரை*
*எங்க தயவு இல்லையின்னு*
*எதையும் செய்ய முடியாது*
*கொள்ளையடிப்பவரும் உண்டு—நல்ல*
*கொள்கை வளர்ப்பவரும் உண்டு*
*பலர் வருவார் பணம் தருவார்—எங்கள்*
*பலத்தாலே காரியத்தை நிலை நாட்ட*
*[எண்ணிக்கொண்டு*
*புகழ்வார் – எமை தொழுவார்*

*தேர்தலிலே நிற்போருக்கும்*
*எங்கள் தயவு ரொம்ப தேவையே*
*கட்சிப் போர்வையிலே காசு தேடுவார்*
*கருணையோடு லஞ்சம் வாங்கும்*

*ஆளும் உண்டு நாட்டிலே*
*நோட்டு நோட்டா தந்த போதும்*
*சும்மா நாங்க வாங்கிடோம்*

*தாசிலோலர் வேசிக் கூட்டம்*
*தப்பு வழியில் பணம் பறிப்போர்*
*யாரும் எங்க தயவுக்காக*
*காத்து நிப்பார் என்றுமே*

பஞ்சாயத்து பேச போவோம்
பணத்துக்காக எதையும் செய்வோம்
அஞ்சாமலே ரௌடித்தனம்
அத்தனையும் செய்திடுவோம்—நாமே
அதட்டிக் கேட்டா அடிக்கப் போவோம்—நாமே

மூலதனம் போட்டுச் செய்யும் தொழிலும் உண்டு
முதலாக ரௌடித்தனத்தை வைத்து நாங்க
நடத்துகின்றோம் இத்தொழிலை நாளுந்தானே
நல்லவர்க்கு நல்லவர்கள் நாங்களே
என்றும் ஊரிலே உள்ளோரை
துன்பம் செய்வதில்லை வீணிலே !

2 அமுதா பாடியது : M. S. ராஜேஸ்வரி

சிட்டுக் குருவி சிட்டுக் குருவி
சேதி தெரியுமா — என்னை
விட்டு பிரிஞ்சு போன கணவன்
வீடு திரும்பலே !

பட்டு மெத்தை விரிச்சு வச்சேன்
சும்மா கிடக்குது — பசும்
பாலை காய்ச்சி எடுத்து வச்சேன்
ஆறிக் கிடக்குது

தலையை வாரி பூ முடிச்சேன்
வாடி வதங்குது — சதா
தெருவில் வந்து நின்று நின்று
காலும் கடுக்குது

வழியை வழியைப் பார்த்து பார்த்து
கண்ணும் நோகுது — அவர்
வந்தால் பேச நிறைய சேதி
நெஞ்சில் இருக்குது (சிட்டு)

**3 டான்ஸ்** பாடியது: **S. C. கிருஷ்ணன், U. R. சந்திரா**
**சீர்காழி கோவிந்தராஜன்**

லேடன்: லேடி லேடி லேடி லேடி
ஆசை லேடி அருகினில் வாடி
ஆடிப்பாடலாம் — இருவரும்
ஆடலாம், பாடலாம், ஆடலாம் (லேடி)

லேடி : லேடா லேடா லேடா லேடா
ஆசை லேடா அருகினில் வாடா
ஆடிப்பாடலாம் — இருவரும்
ஆடலாம், பாடலாம், ஆடலாம் (லேடா)

நாட்டு : ஆங்கில துரை போல ஆடைதான் உடுத்தி
ஆடி நடந்திடும் ஜோடிகளா
அன்னிய மோகந்தான் நம்ம நாட்டுக்கே
இன்னமும் தேவையா சொல்லுங்களேன்

லேடன்: நாட்டு புரத்தாரே — இது
நாகரீகத்தின் சின்னமையா
ஹேட்டும் சூட்டுமே இல்லாத ஆளே
மேதையாய் மதிப்பது இல்லை ஐயா!

நாட்டு : துரைமகனாரே துரைச்சாணியாரே
கவுனு போடுறது எதுக்குங்க?

லேடி : ஆடைப் பஞ்சத்தை போக்கங்க — நல்ல
ஆம்புள்ளே போல நடக்கங்க!

நாட்டு : மஞ்சள் பூசுற அழகு முகத்துக்கு
சுண்ணும்பு பவுடரு எதுக்குங்க?

லேடன்: அதுவா.........
சுருக்கம் விழுந்த கிழவியுங்கூட
குமரி போலவே நடிச்சுடங்க! (லேடி)

நாட்டு : பொம்பளைக்கு கிராப்பு எதுக்குங்க?

லேடி : எண்ணைச் செலவை குறைக்கங்க!

நாட்டு : தலையிலே டொப்பி எதுக்குங்க?

லேடி : சொட்டத் தலையை மறைக்கங்க!

நாட்டு : கையிலே பையி?

லேடி : காய்கறி வாங்க!

நாட்டு : உதட்டிலே சாயம்?

லேடி : வெண் குஷ்டம் போக்க!

நாட்டு : கழுத்திலே டையி?

லேடன் : சுருக்கிட்டு சாக!

நாட்டு : கண்ணுக்கு கண்ணாடி?

லேடன் : பொட்டக் கண்ணை மறைக்க!

நாட்டு : காலுக்கு உறை?

லேடன் : குஷ்டத்தை மறைக்க!

நாட்டு : அருமையான விளக்கமுங்க

லேடன் : அப்டின்னு நீங்களும் போட்டுக்குங்க.........

நாட்டு : அய்யையையே......இது நமக்கு
எதுக்குங்க......நான் சொல்றேன் கேளுங்க
கொத்து மஞ்சள் முகத்தில் பூசி
கொரனாட்டு புடவை கட்டி
நெத்தியிலே திலகமிட்டு
நீண்ட சடை பின்னி விட்டு
உத்தமி சென்ற நாளில்
உலகம் கண்டு புகழ்ந்ததையா
நத்திடும் பழமையதை
நாடுவதே நல்லதையா! (கொத்து)

4 **பங்கஜம் டான்ஸ்** பாடியது: ராதா ஜெயலட்சுமி

நெஞ்சம் விரும்புதே — சதா
நினைந்து மகிழுதே
கொஞ்சி பேசி உறவாட
குழந்தை உள்ளம் கொண்ட அவரை (நெஞ்சம்)
மஞ்சமீது தனியாக
வாடின நாளெல்லாம்
மறந்து நானும் அன்பாக
அவரோடு பேசவே
இன்று வருவாரோ நாளை வருவாரோ
என்றே ஏங்கும்
எந்தன் தொல்லை உணர்வாரோ (நெஞ்சம்)
இன்பம் இது தான் என சொல்லாமல்
சொல்வது போல்
என் உள்ளம் தனிலே புது நினைவே புக செய்துமே
சென்ற துரைதானே என்னை மறந்தாரோ
வந்தே அன்பை அள்ளி அள்ளி தருவாரோ
(நெஞ்சம்)

5 **கள்ளபார்ட்** பாடியது: T. M. சௌந்தரராஜன்

வடக்கத்திக் கள்ளனடா—நான்
வட்டிக் கடை திருடனடா
தெற்கே புகுந்து கொள்ளையடிக்கும்
திறமை மிகுந்த சூரனடா
குடிசை மாடி எதிலும் புகுந்து
கொள்ளையடிச்சிடுவேன்—கள்ளன் நான்
கொள்ளையடிச்சிடுவேன்—கள்ளன் நான்
கொள்ளையடிச்சிடுவேன்
குடிசைக்காரன் பிடிக்க வந்தால்
குதித்து ஓடுவேன்—கள்ளன் நான்
குதித்து ஓடுவேன்—அப்பா நான்
குதித்து ஓடுவேன்

ஜோபடி செய்வதிலே
சூரனடா தீரனடா
தூரத்தி வரும் போலீசுக்கே
டிமிக்கி கொடுக்கும் திருடனடா

ஹே...... தில்லாலங்கடி தில்லாலங்கடி
தில்லாலங் குயிலே—பலபா
தில்லாலங் குயிலே—பலபா
தில்லாலங் குயிலே.........

தில்லாலங்கடிப் பாட்டுப்பாடி வந்தேனே குயிலே
—பலபா—வந்தேனே குயிலே—
ஷோக்கா—வந்தேனே குயிலே
அஜக்தா, திமாக்தா, சம்போ, சம்போ,
தலகடி—குமுறு தங்குப்பான்டப்பா—

ஹா தகிர்தா ஹா தகிர்தா
ஹா தகிர்த தகிர்த தகிர்த தகிர்த
தகிர்த தகிர்ததா—தகிர்த தகிர்ததா
தகிர்த தகிர்த—இந்தா

**6 மன்னார்-பூங்காவனம் ரூபிட்** பாடியது : **K. R. செல்லமுத்து**
**P. கனகா**

பூங்காவனமே நீ
புரிஞ்சி கொள்ளாமலே பேசுறே
எங்கும் என்றும் ஆம்பளே
சிங்கம் பங்கம் ஏதடி ?

கோமாளி போல நீயும் பேசிடாதே – சும்மா
குறை சொல்லி என்னை நீயும் ஏசிடாதே
வீம்புனாலே ஐயா விளையும் தொல்லை மெய்யா
ஏமாளி ஆகிடாதே சும்மா என்னை நீயும்
திட்டிடாதே !

ஆம்புளே என்னிடம் வீம்புகள் பேசாதே
ஆகாது அம்மா
அப்புறம் நான் வேறே பெண்டாட்டி கட்டிட
ஆகும் அறிவாய் அம்மா நிஜமா

பெண்டாட்டி இருக்கையிலே
பிரிய தொரையே கேளுங்க
பொண்ணு வேறே தேடிப் போனா
கிடைக்கும் ஜெயிலு பாருங்கோ
வந்திருக்கு சட்டம் இப்போ
வாயடக்கிப் பேசுங்கோ

தாலியும் கட்டாமலே
தாரம் வேறே கொண்டேனானால்
நீலி நீயும் என்ன செய்வே — அதை நீ
நினைச்சுப் பாத்து பதில் சொல்லடி

**7 பிச்சைக்காரன்** பாடியது : T. M. சௌந்தரராஜன்

உத்தமராய் நடித்திடுவார்
உயர்ந்தவர்போல் பேசிடுவார்
அத்தனையும் வெளி வேஷம்
அதை நம்பினாலே வரும் மோசம்

தோற்றத்தைக் கண்டும்
சொல்வதைக் கொண்டும்
மனிதனை மதிக்காதே — மனமே
மோசம் போகாதே — நீமதி
மோசம் போகாதே

தரித்திரராய் இருக்கையிலே
தாரமே தெய்வமென்பார்
தனவந்தரானவுடன்
தாசி பாதம் தொழுதிடுவார்

தோற்றத்தைக் கண்டும்
சொல்வதைக் கொண்டும்
மனிதனை மதிக்காதே — மனமே
மோசம் போகாதே — நீமதி
மோசம் போகாதே !

தாசிகளை நம்பி நம்பி
ஏமாந்து போனவர்கள்
தேசத்திலே கோடியுண்டு
தெரிந்து கொள்வாய் நீ மானிடனே

தோற்றத்தைக் கண்டும்
சொல்வதைக் கொண்டும்
மனிதனை மதிக்காதே — மனமே
மோசம் போகாதே — நீமதி
மோசம் போகாதே

8 அமுதா M. S. ராஜேஸ்வரி
வேலு பாடியது: திருச்சி லோகநாதன்
பங்கஜம் ராதா ஜெயலட்சுமி

பொன்னான வாழ்வு மண்ணாகி போமா?
துயரம் நிலைதானா? உலகம் இதுதானா?

பண்போடு முன்னாளில் அன்பாக
என்னோடு வாழ்ந்தாரே
வீணான பாலாய் விரும்பாத பூவாய்
இன்றென்னை விடுத்தாரே
என் அன்பை மறந்தாரே!

பொன்னான வாழ்வு மண்ணாகி போமா?
துயரம் நிலைதானா? உலகம் இதுதானா?

பண்பாடு இல்லாமல் மண் மீதே
பாழாகி நொந்தேனே
தேனான வாழ்வு திசை மாறி போச்சே
நிம்மதி இழந்தாச்சே
தீராத பழியாச்சே!

பொன்னான வாழ்வு மண்ணாகி போமா
துயரம் நிலைதானா? உலகம் இதுதானா?

பெண்ணென்றும் பாராமல்—எல்லோரும்
என்மீது பழி சொல்வார்
உள்ளன்பு கொண்டேன்—அவர் மீது நானே
ஊராரும் அறிவாரோ?
என் வாழ்வை அழிப்பாரோ! (பொன்னான

## உதவியாளர்கள்

| | | |
|---|---|---|
| டைரக்ஷன் | ... | S. ராஜேந்திரன் |
| ஒளிப்பதிவு | ... | K. ராமச்சந்திரன் |
| ஒலிப்பதிவு | ... | N. பழனியப்பன்<br>C. P. நடராஜன் |
| பாடல்கள் ஒலிப்பதிவு | ... | கண்ணன் |
| லேபரட்டரி | ... | M. சுப்ரமணியம் |
| எடிட்டிங் | ... | E. V. ஷண்முகம் K. துரைராஜ் |
| ஆர்ட் & செட்டிங் | ... | S. C. வெங்கட்ராமன் (ஆர்ட்)<br>V. குட்டி ஆசாரி (செட்டிங்)<br>P. சீனிவாசன் (பெயிண்டிங்) |
| ஸ்டில்ஸ் | ... | P. V. வெங்கடாஜலம் |
| சங்கீதம் | ... | புகழேந்தி |

ஸ்டுடியோ

# சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

*Recorded on* **R C A** *Sound System*

நாதஸ்வரம்

**நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் & பார்ட்டியார்**

---

இப்படத்தின் பாடல்களை எச். எம். வி யிலும்
கொலம்பியாவிலும் கேளுங்கள்

---

தயாராகிறது

எம். ஏ. வி. பிக்சர்சாரின்

# சம்பூர்ண ராமாயணம்

வசனம் A. P. நாகராஜன்

டைரக்ஷன் K. சோமு

---

எம். ஏ. வி. பிக்சர்சாரின்

அடுத்த வெளியீடு

# செங்கமலத் தீவு

கதை வசனம் A. P. நாகராஜன்

டைரக்ஷன் K. சோமு

சோமசுந்தரம் பிரஸ் (ரயில்வே ஸ்டேஷன் எதிர்புறம்) கோவை